www.Padasalai.Net www.CBSEtips.in

V12Bio

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 12

உயிரியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - I (உயிரி - தாவரவியல்) மதிப்பெண்கள்: 25

பகுதி - அ 5×1=5

**I. சரியான விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதவும்:**

1) **பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. | எண்டோதீலியம் | - a) | மகரந்தத்துகள் |
| 2. | மகரந்தத்தாள் வட்டம் | - b) | மகரந்தப்பை சுவர் |
| 3. | ஆண் கேமீட்டகத் தாவரம் | - c) | அஸ்டரேஸி |
| 4. | முதல் நிலை புறப்பக்க அடுக்கு | - d) | மகரந்தத்தாள்கள் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | d | a | b | c |
| ஆ) | c | d | a | b |
| இ) | c | d | b | a |
| ஈ) | c | a | d | b |

2) **சரியான இணையைக் கண்டறி:**

அ) இரு பண்பு கலப்பு - 1 : 2 : 1

ஆ) ஒரு பண்பு கலப்பு - 9 : 3 : 3 : 1

இ) முழுமையற்ற ஓங்குதன்மை - 1 : 2 : 1

ஈ) ஓங்குதன்மை மறைத்தல் - 9 : 3 : 4

3) மகரந்தப்பை சுவர் அடுக்குகளை மகரந்த அறையிலிருந்து வெளிப்புறமாக வரிசைப்படுத்தவும்.

அ) புறத்தோல், மையஅடுக்கு, டபீட்டம், எண்டோதீசியம்

ஆ) டபீட்டம், மையஅடுக்கு, புறத்தோல், எண்டோதீசியம்

இ) எண்டோதீசியம், புறத்தோல், மையஅடுக்கு, டபீட்டம்

ஈ) டபீட்டம், மையஅடுக்கு, எண்டோதீசியம், புறத்தோல்

4) $R_1R_2r_2r_2$ என்னும் மரபணு ஆக்கம் கொண்ட கோதுமை விதையுறை புறத்தோற்றம் என்ன?

அ) அடர்சிவப்பு ஆ) மிதமான அடர்சிவப்பு

இ) மிதமான சிவப்பு ஈ) இளஞ்சிவப்பு

5) .............. என்பவர் குறுக்கேற்றம் என்ற சொல்லை முன்மொழிந்தார்.

அ) T. போவேரி ஆ) W.S. சட்டன் இ) மார்கன் ஈ) மோண்ட்கோ மெரி

பகுதி - ஆ 3×2=6

**II. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:**

6) நுண் வித்தின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

7) ஸ்டோமியம் என்றால் என்ன?

8) இணைப்பு என்றால் என்ன?

9) பசுங்கணிகம் மற்றும் மைட்டோகாண்டிரியா பண்புகளின் பாரம்பரியம் மெண்டலின் பாரம்பரிய முறையை பின்பற்றவில்லை. ஏன்?

10) பல்கூட்டு அல்லீல்கள் என்றால் என்ன?

பகுதி - இ 3×3=9

**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:**

11) பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பிரையோஃபில்ல இலை புதிய தாவரங்களை எவ்வாறு தோற்றுவிக்கிறது?

12) மெண்டல் ஏன் பரிமாற்ற கலப்பு செல்கள்? எடுத்துக்காட்டு தருக.

13) பிணைப்பு மற்றும் குறுக்கேற்றத்திற்கு இடையிலான வேறுபாடுகளைத் தருக.

14) டபீட்டத்தின் ஏதேனும் மூன்று பணிகளை பட்டியலிடுக.

15) மெண்டலின் பெருக்கச் சோதனை வெற்றிக்கான காரணங்கள் யாவை?

பகுதி - ஈ 1×5=5

**IV. கீழ்க்காணும் வினாவிற்கு விடையளி:**

16) குறுக்கேற்ற செயல்முறையை விளக்குக. **(அல்லது)**

கருவூண்திசு என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**V12Bio**

பகுதி - II (உயிரி - விலங்கியல்) மதிப்பெண்கள்: 25

பிரிவு - I

5×1=5

**I. குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

1) சீம்பாலில் அதிகம் காணப்படுவது
அ) IgE ஆ) IgA இ) IgD ஈ) IgM

2) கீழே உள்ள குழுக்களுள், பாக்டீரிய பால்வினை நோய்க்குழுவைக் குறிப்பிடுக.
அ) கிரந்தி, வெட்டைநோய் மற்றும் கேண்டிடியாஸிஸ்
ஆ) கிரந்தி, கிளாமிடியாஸிஸ், வெட்டைநோய்
இ) கிரந்தி, கொனோரியா, டிரைகோமோனியாஸிஸ்
ஈ) கிரந்தி, டிரைகோமோனியாஸிஸ், மெடிகுளோஸிஸ்

3) ஏபிஸ் வகை தேனீயில் நடைபெறும் இயற்கையான கன்னி இனப்பெருக்கம் எது?
அ) தெலிடோகி ஆ) ஆம்ஃபிடோகி
இ) அர்ரீனோடோகி ஈ) அ மற்றும் இ

4) வரிசை I மற்றும் II ஐ பொருத்தி சரியான விடைத்தொகுப்பை தெரிவு செய்யவும்:

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| A) தாமிரம் வெளிவிடு IUD | - | i) LNG - 20 |
| B) ஹார்மோன் வெளிவிடு IUD | - | ii) லிப்பஸ் வளைய IUD |
| C) மருந்தில்லா IUD | - | iii) சாஹெலி |
| D) மாத்திரைகள் | - | iv) Multiload - 375 |

அ) A-iv, B-ii, C-i, D-iii ஆ) A-iv, B-i, C-iii, D-ii
இ) A-i, B-iv, C-ii, D-iii ஈ) A-iv, B-i, C-ii, D-iii

5) டர்னர் சின்ட்ரோம் கொண்ட பெண்களிடம் காணப்படுவது
அ) சிறிய கருப்பை ஆ) வளர்ச்சியடையாத அண்டகங்கள்
இ) வளர்ச்சியடையாத மார்பகம் ஈ) மேற்கண்ட அனைத்தும்

பிரிவு - II

3×2=6

**II. எவையேனும் மூன்றனுக்கு விடையளி:**

6) சிசுக்கொலையிலிருந்து கருக்கொலையினை வேறுபடுத்துக.
7) மனித விந்துசெல்லின் படம் வரைந்து பாகம் குறிக்கவும்.
8) அண்டம் விடுபடுதல் என்றால் என்ன? மாதவிடாய் சுழற்சியின் எந்த நாளில் நடைபெறுகிறது?
9) இளம் உயிரி கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? ஒரு எடுத்துக்காட்டு தருக.
10) இணையா Y குரோமோசோம் பகுதியின் இரு பகுதிகள் யாவை? பால் நிர்ணயப் பகுதி 'Y' எந்தப் பகுதியில் உள்ளது?

பிரிவு - III

3×3=9

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி:**

11) செமினல் பிளாஸ்மா என்றால் என்ன? அதன் பயன் எழுதுக.
12) இளவுயிரிநிலை எவ்வாறு இனப்பெருக்க நிலையிலிருந்து வேறுபட்டுள்ளது?
13) விதைப்பையானது வெப்ப நெறிப்படுத்தி பை என ஏன் அழைக்கப்படுகிறது?
14) XY வகை குரோமோசோம் பால் நிர்ணயித்தலில், பெண் உயிரி இரு 'X' குரோமோசோம்களையும், ஆண் உயிரி ஒரு 'X' குரோமோசோமையும் கொண்டுள்ளது. பாலினத்திற்கு இடையேயான அளவீட்டு வேறுபாட்டை உயிரினம் எவ்வாறு ஈடுசெய்கிறது?
15) கிரந்திநோயினை ஏற்படுத்தும் நோய்க்காரணியின் பெயரினை எழுதுக. நோயின் மூன்றாம் நிலையில் ஏற்படும் அறிகுறிகளை எழுதுக.

பிரிவு - IV

1×5=5

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

16) இனப்பெருக்கம் மற்றும் குழந்தைநலம் பாதுகாப்பு திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளினை விரிவாக எழுதுக.

(அல்லது)

மனித கருவை சூழ்ந்து இருக்கும் கருசூழ்படலங்களின் பெயர்களை எழுதுக. அவைகள் எவ்வாறு வளரும் கருவினை பாதுகாக்கிறது?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com